| | | |
|---|---|---|
| சாட்சி : DW1<br>அப்துல் சலாம் | அ.வ.எண். 117/2016 | 02.01.2025 |

குறுக்கு விசாரணை

வாதியை எனக்கு நேரடியாக தெரியும், அவர் கல்பாளையத்தை சேர்ந்தவர். வாதியின் வழக்குரையை படித்து பார்த்து தெரிந்து கொண்டேன். 2ம் பிரதிவாதி எனது மகள் ஆவார். 2ம் பிரதிவாதி இந்த வழக்கில் தோன்றாதரப்பினராகிவிட்டார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் 2ம் பிரதிவாதி மீது வழக்கு தாக்கல் செய்யவில்லை. என் மீது தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். எனது எதிர்வழக்குரையில் 2ம் பிரதிவாதியை எனது மகளாக காண்பிக்கவில்லை. எனது மகள் மீது வாதி வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரிந்தும் அதனை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகள் குறித்து எனக்கு சொன்னால் தான் தெரியும். எனது எதிர்வழக்குரைக்கு நான் தான் விவரம் சொன்னேன். நான் சொன்ன விவரத்தின் அடிப்படையில் தான் எதிர்வழக்குரை தயாரிக்கப்பட்டது என்பதை படித்து பார்த்து தெரிந்து கொண்டேன். வழக்கு சொத்து ஹாஜி சையது முகமது சாகிப் சுதாரி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க 09.01.2025 அன்று குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.